# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன் பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள். 06.07.2026**

**முன்னிலை**

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 10293/D/2024**

திரு ப.ரவிச்சந்திரன் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
இணை இயக்குநர் (மாநகராட்சி),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
எம்.ஆர்.சி.நகர், சென்னை - 600 028. .. பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன் கீழ் மனுதாரரின் மனு நாள் | 04.05.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல் முறையீட்டு மனுவின் நாள் | 16.06.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 01.08.2024 |

******

**ஆணை**

இன்று 06.07.2026 முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு ப.ரவிச்சந்திரன் அவர்கள் சார்பாக அவரது நண்பர் திரு செல்வகுமார் நேரில் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர். இணை இயக்குநர் (மாநகராட்சி), நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை -28 அவர்கள் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் கலந்துக்கொள்ள இருப்பதால் ஆணையத்தின் விசாரணைக்கு நேரில் ஆஜராக இயலவில்லையென்றும், பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத்தகவல் அலுவலர். திரு S.அருண்கென்னடி, கண்காணிப்பாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை -28 அவர்கள் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 04.05.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் ஆணை எண்.186/மா/2023 நாள்.03.10.2023 குறித்த விவரம், பொதுத்தகவல் அலுவலர் பெயர், பதவியின் பெயர், மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி எண் மற்றும் கைபேசி எண் விவரம் தொடர்பான 16 இனங்களில் தகவல்களைக் கோரி பொது தகவல் அலுவலர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை -28 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(1)ன் கீழான 16.06.2024 தேதியிட்ட முதல் மேல்மறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தனக்கு முழுமையான தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(3)ன் கீழான 01.08.2024 தேதியிட்ட தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.07.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரரின் பிரதிநிதி திரு செல்வகுமார் அவர்கள் மனுதாரர் கோரிய தகவல்களில் இனம் - 4, 5, 6, 9, 10, 13, 14 மற்றும் 15 ஆகியவற்றிற்குரிய தகவல்களைப் பொதுத்தகவல் அலுவலரிடமிருந்து பெற்று வழங்குமாறு ஆணையத்தை கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்களை ஏற்கனவே 28.11.2025 மற்றும் 17.12.2025 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை இவ்வாணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க இனம் 4, 5, 6, 9, 10, 13, 14 மற்றும் 15 ஆகிய இனங்களுக்கான முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவையும் பொதுத்தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு இனம் 4, 5, 6, 9, 10, 13, 14 மற்றும் 15 ஆகிய இனங்களுக்கான முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, ஆணையம் பொதுத்தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து, பொதுத்தகவல் அலுவலருக்கு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனம் 4, 5, 6, 9, 10, 13, 14 மற்றும் 15 ஆகிய இனங்களுக்கான முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் <u>“தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது” என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 27.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு***

*தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடப்படுகின்றது.*

**ஒம்/-(வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 10293/D/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
இணை இயக்குநர் (மாநகராட்சி),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
எம்.ஆர்.சி.நகர், சென்னை - 600 028.

**<u>மனுதாரர்</u>**

திரு V.P.ரவிச்சந்திரன்,
த/பெ. திரு V.T.பழனிச்சாமி,
க.எண்.4சி, ஆகாஷ் இல்லம்,
பாளையக்காடு,
திருப்பூர் மாவட்டம் - 641 601.

***Copy to: File***
***VP / PA***